ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1770/19 - 2012 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2012.08.10

1770/19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 2 / 2005.

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அரசியலமைப்பின் 155 FFF என்னும் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 155 FF என்னும் உறுப்புரையின் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
தேசியப் பொலிஸ் ஆணைக்குழு.

கொழும்பு,
2012, ஓகத்து 10.

விதிகள்

1. இவ்விதிகள் "2012 ஆம் ஆண்டின் நடைமுறைகளுக்கான விதிகள் (பொலிஸ் அலுவலர்கள் அல்லது பொலிஸ் படை அணிக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளின் புலனாய்வு)" என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஒரு பொலிஸ் அலுவலர் அல்லது ஒரு பொலிஸ் படை அணியினால் செய்யப்பட்ட ஒரு செயல் அல்லது செய்யாமல் விடப்பட்டமை காரணமாக இன்னலுற்றவரான ஆளொருவர் அல்லது இன்னலுற்றவர்களான பொதுமக்களின் உறுப்பினர்கள் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவிடம் (இதனகத்துப்பின்னர் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் முறைப்பாட்டைச் செய்யலாமென்பதுடன், சட்டத்திற்கு இணங்கியவாறு தோதான பரிகாரத்தையும் நாடலாம்.

3. ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு முறைப்பாடும் ஒரு பதிவேட்டில் மாகாணம் மற்றும் மாவட்டத்தின்படி பதிவு செய்யப்படவேண்டுமென்பதுடன், அது கிடைக்கப்பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள் குறித்த முறைப்பாடு கிடைத்தமைபற்றி முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும். குறித்த முறைப்பாடும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், எவையேனுமிருப்பின், ஆணைக்குழுவினால் பாதுகாப்பாகப் பேணப்படுதல் வேண்டும்.

4. இவ்விதிகளுக்கான அட்டவணையின் "இ" என்னும் கூறின்கீழ் உள்ளவை தொடர்பான புலனாய்வுகளை முறைப்பாடு கிடைத்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் முடிவுறச் செய்வதற்கும், மற்றும் அட்டவணையின் "அ" மற்றும் "ஆ" என்னும் கூறுகளின் கீழ் உள்ளடங்குகின்ற புலனாய்வுகளை, முறைப்பாடு கிடைத்ததிலிருந்து அறுபது நாட்களுக்குள் முடிவுறச் செய்வதற்கும் ஆணைக்குழுவானது அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

5. ஏதேனும் பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்து, பொலிஸ் கட்டுக்காப்பில் இருக்கும் எவரேனும் ஆளைச் சோதனை செய்வதற்கு அல்லது அத்தகைய ஆட்களிடம் வினாக்களை வினவி விசாரணை செய்வதற்கும் மற்றும் அத்தகைய ஆட்களினால் பொலிஸுக்கு அளிக்கப்பட்ட வாக்குமூலத்தை அல்லது வேறு இயைபான ஆவணங்களைச் சோதனை செய்யவும் மேலும் அத்தகைய ஏதேனும் வாக்குமூலங்களின் மற்றும் தொடர்புடைய வேறு ஆவணங்களின் பிரதிகளையும் மற்றும் அது தேவையெனக் கருதுகின்ற தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கும் என ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கான உதவியை, பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியின் ஒத்துழைப்புடனும் உதவியுடனும் ஆணைக்குழுவானது பெற்றுக்கொள்ளலாம்.

6. ஆணைக்குழுவானது, 2 ஆம் விதியின் கீழ்ச் செய்யப்பட்ட முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதில் அதற்கு உதவி செய்வதற்கென பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் மற்றும் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினதும் ஒத்துழைப்புடனும் உதவியுடனும், விடயத்திற்கேற்ப, ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஒரு பொலிஸ் மாவட்டத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஒரு பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது சிரேட்ட பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது ஒரு பிராந்தியத்தின் சிரேட்ட பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி ஆகியோர்களிடம் உதவி அளிக்குமாறு கோரலாம்.

7. ஆணைக்குழுவானது பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினதும் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் ஒத்துழைப்பு மற்றும் உதவியுடன் 2 ஆம் விதியின்கீழ்ச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதில் ஆணைக்குழுவிற்கு உதவுவதற்கென, ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்படவேண்டியவர்களான, பொலிஸ் அலுவலர்களின் சேவைகளைப் பெறலாம்.

8. புலனாய்வுகளை நிறைவேற்றிய ஆணைக்குழுவின் அலுவலரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணைக்குழுவானது, இன்னலுற்ற ஆளுக்குச் சட்டப்படி ஏதேனும் பரிகாரம் அளிக்கப்படவேண்டுமா என்பதனையும், குறித்த தவறான செய்கையை அல்லது செய்யாமல்விட்டமையை புரிந்த பொலிஸ் அலுவலருக்கு அல்லது அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையையும் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு அல்லது பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு, அவசியமான நடவடிக்கைக்கென, அத்தகைய அறிக்கையுடன் சேர்த்து அதன் தீர்மானத்தை அனுப்புதலும் வேண்டும்.

9. ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட அறிக்கைகள் மீது, விடயத்திற்கேற்ப பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் ஆணைக்குழுவானது அவதானித்தல் வேண்டும்.

10. ஏதேனும் விடயங்கள் அல்லது நடைமுறைகள் சம்பந்தமாக இந்த விதிகளில் எதுவும் கூறப்படாமலிருக்குமிடத்து, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட விடயத்திற்குத் தோதான நடவடிக்கைகளை ஆணைக்குழுவானது தீர்மானிக்கலாம்.

11. அரசியலமைப்பின் உறுப்புரை 155 எ என்பதன் (2) ஆம் பந்தியின் கீழ் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 1480/8 ஆம் இலக்க, 2007, சனவரி 17 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் நடவடிக்கைமுறை விதிகள் (பொதுமக்கள் முறைப்பாடுகள்) இத்தால் நீக்கப்படுகின்றன.

**அட்டவணை**

*கூறு "அ" :*

1. மனித உரிமைகளை மீறும் செயல்கள்.

2. பொலிஸ் பாதுகாப்பில் அல்லது கட்டுக்காப்பில் உள்ள பொதுமக்களின் ஒருவர், எவரேனும் பொலிஸ் அலுவலரின் செய்கையினால், சித்திரவதைக்கு அல்லது கொடுமைப்படுத்தலுக்கு அல்லது மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது ஊறுவிளைவித்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்ற சார்த்துரைகள்.

3. பொலிஸ் பாதுகாப்பில் அல்லது கட்டுக்காப்பில் இருக்கும் ஆளொருவருக்கு மரணம் சம்பவித்தல்.

4. வழக்குகள் புனையப்படுதலும் மற்றும் நீதிமன்றத்திற்குப் பொய்யான அறிக்கைகள் அல்லது கூற்றுக்கள் சமர்ப்பித்தலும்.

5. பொலிஸ் அலுவலர்களினால் செய்யப்படுகின்ற பிடியாணையின்றிக் கைது செய்யத்தகு தவறுகள்.

6. புலனாய்விற்குட்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் அல்லது ஒழுக்காற்று விசாரணைகள் அல்லது நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை, நேரடியாகவோ அல்லது இடையீட்டாளர்கள் ஊடாகவோ மிரட்டுதல், அச்சுறுத்தல் மற்றும் தலையீடு செய்தல்.

7. மருத்துவ உத்தியோகத்தர் அல்லது வேறு எவரேனும் அரசாங்க உத்தியோகத்தரை வலுக்கட்டாயப்படுத்துதல், மிரட்டுதல் அல்லது சாட்சியங்களை அழித்தல் ஆகிய செயல்கள் ஊடாக, பொய் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் செய்வதற்கு எத்தனித்தல் அல்லது அத்தகைய உத்தியோகத்தர்களைத் தங்கள் கடமைகளைச் செய்வதைப் புறக்கணிக்கச் செய்தல்.

8. பொலிஸ் சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் பாரதூரமான அதிகாரத் துஷ்பிரயோகம், கடமைகளை, செயல்களைப் புறக்கணித்தல்.

9. சட்ட விரோதமான கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல்.

*கூறு "ஆ" :*

1. தாக்குதல், மிரட்டுதல், துஷ்பிரயோகம் அல்லது அச்சுறுத்தல்.

2. பொலிஸுக்குச் செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்ட வாக்குமூலத்தைப் பதிவுசெய்ய மறுத்தல், தவறுதல், அல்லது பிற்போடுதல்.

3. பதியப்பட்டுள்ள வாக்குமூலத்தை வேண்டுமென்று திரிபுபடுத்துதல்.

4. பதிவேடுகளைப் பேணத்தவறுதல், பதிவுகளை அழித்தல் அல்லது மாற்றுதல்.

5. அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு அல்லது வேறு தரப்பினருக்கு அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுகையில் பாரபட்சம் காட்டுதல்.

6. ஒரு பொலிஸ் அலுவலரின் துர்நடத்தையின் காரணமாக, நீதி தவறுதல்.

7. ஒரு பொலிஸ் அலுவலர் அல்லது ஒரு பொலிஸ் வாகனம் சம்பந்தப்பட்டுள்ள, மரணம் சம்பவிக்கும் வீதி விபத்து.

8. பொலிஸ் சேவை பிராந்திய சிரேட்ட பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி, மாவட்டப் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி, பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் அல்லது பொறுப்பதிகாரிகள் ஆகியோரின் பொதுவான வினைத்திறனின்மை, தவறுகள், ஒழுங்கீனம் அல்லது அதையொத்த வேறு காரணங்கள்.

9. குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்களுக்கெதிராக வேண்டுமென்றே முன்னெடுக்கப்படுகின்ற குறைபாடுகளுள்ள அல்லது பூரணமாகவில்லாத குற்றவியற் குற்றச்சாட்டுகள்.

*கூறு "இ" :*

1. முறைப்பாடுகளைப் பதிவு செய்ய மறுத்தல்.

2. ஆளொருவரினால் பொலிஸுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை, வழமையான கட்டணங்களைச் செலுத்தியும், பெற்றுக்கொள்வதில் ஏற்படுகின்ற முறையற்ற கால தாமதம்.

3. முறைப்பாட்டுக்காரர்களை அல்லது சாட்சிகளை வாக்குமூலங்கள் அளிப்பதிலிருந்து ஊக்கமிழக்கச் செய்தல்.

4. முறைப்பாட்டாளர்களுக்கு அல்லது சாட்சிகளுக்கு அடாத மொழிகளில் பேசுதல், அச்சுறுத்தல்கள் அல்லது மிரட்டல்கள் செய்தல்.

5. செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்த நடவடிக்கைகள் எடுப்பதில் பொலிஸ் அலுவலர்களின் மந்தமான தன்மை அல்லது பாரபட்சம் காட்டுதல்.

*8-721*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.